# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2260/74 - 2021 දෙසැම්බර් මස 31 වැනි සිකුරාදා - 2021.12.31

*2260/74 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**5 ஆவது திருத்தம்**

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2013, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதிய மற்றும் 1804/E 50 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம். ஏ. பீ. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

*2021, திசெம்பர் 27.*

**பகுதி** I

*திருத்த இலக்கம் 01 – 2013, யூலை மாதம் 19 ஆந் திகதிய மற்றும் 1819/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 02 – 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிய மற்றும் 1841/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 03 – 2018, சனவரி மாதம் 12 ஆந் திகதிய மற்றும் 2053/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 04 – 2020, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதிய மற்றும் 2204/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*


1A - G 35724 — 15 (2021/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பகுதி II**

**பின்னிணைப்பு 01**

**03. பரீட்சை முறை :**

பகுதி "அ":

| | | | |
|---|---|---|---|
| (i) | கிரகித்தல் | நேரம் 1 ½ மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |
| (ii) | நுண்ணறிவு | நேரம் 1 ½ மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |
| (iii) | பொது அறிவு | நேரம் 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

**05. பாடத்திட்டம் :**

**பாட இலக்கம் 01 - கிரகித்தல்**

பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களைப் புரிந்து கொள்ளும் திறன், தொடர்பாடல், ஆற்றல், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் படைப்பாற்றல் போன்ற ஆற்றல்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் புறவய வினாக்களைக் கொண்டமைந்தது.

**பாட இலக்கம் 02 - நுண்ணறிவு**

பரீட்சார்த்தியிடம் காணப்படும் தர்க்கிக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருள்கோடல், தொடர்புகளைக் காணல், பெயர்ப்பு, சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், காரண காரியத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளல், எதிர்வுகூறல், தகவல் ஒழுங்கமைப்பு, வடிவங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் பல்தேர்வு வகை வினாக்களைக் கொண்டமைந்தது.

**பாட இலக்கம் 03 - பொது அறிவு**

இலங்கையின் பூகோள, அரசியல், பொருளாதார, சமூக கலாசார சூழல் உள்ளிட்ட இலங்கையின் முழுச் சூழல் தொடர்பிலும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற சமகால விடயங்கள் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவை அளவிடுவதற்கான பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளிக்கும் வகையிலான வினாக்களை மாத்திரம் கொண்டமைந்தது.

(பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப் பெறும்)

EOG 12-0356

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.